தமிழ் வளர்ச்சிக் கழகம்
செய்தி மின் மடல்
தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 7 ஆகஸ்ட் 2026

## உங்களுடன்

நினைத்து நினைத்து மகிழ
நிகழ்வுகள் வேண்டும்!
நிகழ்வுகள் எல்லாம்
நினைவுகள் ஆவதில்லை!
நிகழ்வுகளின் தொடர்விளைச்சல்
நினைவுகளாகும் போலும்!
தனிமனிதர்
பொதுப் பணிகளோடு
சேரும்போதுதான்
நிகழ்வுகள்
நினைவுகளாகின்றன!
வியந்து போனேன்.
மேனாள் ஒன்றிய அமைச்சர்,
மாண்பமை திரு ப.சி. அவர்கள்,
தமிழ் வளர்ச்சிக்கழகப் பணிகளில்
மற்றவர்கள்
எப்படி ஈடுபட வேண்டும் என்பதற்கு
இன்னொருமுறை
எடுத்துக்காட்டாகி இருக்கிறார்.
தில்லியிலிருந்து
சென்னை வந்தவர்,
விமான நிலையத்திலிருந்து
வீட்டுக்குக்கூடப் போகாமல்,
தமிழ் வளர்ச்சிக்கழகப்
புரவலர் நிதிக்காக
டி.வி.எஸ். மோட்டார்ஸ்
நிறுவனத் தலைவர்
திரு வேணு சீனிவாசன் அவர்களின்
இல்லம் வந்தார்.
அரை மணி நேர உரையாடலில்
கலந்துகொண்டன
அரசியலும் தமிழும்.
புரவலர் நிதி பற்றிப்
பேச்சு வந்தபோது,
"தொலைபேசியில்
சொல்லியிருக்கலாமே!
நாளைக்கே அனுப்புகிறேன்" என்றார்
டி.வி.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத் தலைவர்.
நம்ப முடியவில்லை.
அடுத்த நாளே
நிறுவனத்திலிருந்து பேசி,
வங்கிக் கணக்குக்குப்
பத்து இலட்சத்தை
அனுப்பிவிட்டார்கள்!
தகவல் அறிந்த
ஆட்சிக்குழுத் தலைவர்,
தாம் நன்றி தெரிவித்ததோடு,
தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்தும்
நன்றிக் கடிதமும்
இரசீதும்
அனுப்பச் சொன்னார்.
முடிந்த கையோடு,
இன்னும் இரண்டு பேர் சேர்ந்தால்
புரவலர் நிதி
ஒரு கோடியை எட்டிவிடும் என்று
அடுத்த கட்டத்திற்கு
ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்.
வழக்கமான பணிகளோடு
நினைத்துப் பார்க்க
இன்னொரு நிகழ்வு.
மறைமலையடிகள் 150ஆவது
பிறந்தநாள் நிறைவு விழா!
தவத்திரு குன்றக்குடி
பொன்னம்பல அடிகளார்
சிறப்புரை வழங்கிய விழாவில்
கலந்துகொண்டு சிறப்பித்தனர்
செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும்
தமிழரும் எனும்
கனடா மாநாட்டுக்குத்
தமிழ்நாட்டுத் தலைவர்களை
அழைக்க வந்திருந்த

ஈழத்து நாடாளுமன்ற உறுப்பினர்
திரு குகதாசன் அவர்களும்,
திரு நிமால் விநாயகமூர்த்தி அவர்களும்.
மேலும்
கூகுள் வரைபடத்தில்
சங்க இலக்கிய ஊர்களை
இணைப்பது குறித்த
இலக்கிய
இடவரைவியல் களஞ்சியம் குறித்தும்,
சங்க இலக்கியக்
குறிச்சொல் களஞ்சியம் குறித்தும்
புதிய ஆய்வுத்திட்டங்கள்
ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
மாணவர் அகராதியும்,
சிந்தனைக் களஞ்சியமும்
எப்போது நிறைவடையும் என்று
நானும் காத்திருக்கிறேன்,
நம்பிக்கையோடு உங்களுடன்!

அன்புடன்
ம.ரா.

## புரவலர் நிதி



டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் பத்மபூஷன் விருதுபெற்ற திரு. வேணு சீனிவாசன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குப் புரவலர் நிதி ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) வழங்கியுள்ளார்கள், அவர்களுக்கு மகிழ்ச்சியும் நன்றியும்.

## நிருவாகக் கூட்டம்

01.07.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி, நிருவாகம், திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.



# கலந்துரையாடல் கூட்டம்

## 08.07.2026 – மாணவர் அகராதிப் பணி

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 08.07.2026 அன்று மாணவர் அகராதிப் பணி தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

கலந்து கொண்டவர்கள்:

1. முனைவர் பா.ரா. சுப்பிரமணியன், 2. முனைவர் ஒப்பிலா மதிவாணன், 3. முனைவர் வாணி அறிவாளன், 4. முனைவர் கமலி, 5. முனைவர் அ. ஜேம்ஸ், 6. முனைவர் சிவ முருகேசன்.

மாணவர் அகராதிப் பணியின் தற்போதைய முன்னேற்றம் குறித்து முனைவர் அ. ஜேம்ஸ் விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து பின்வருமாறு முடிவுகள் எடுக்கப்பட்டன:

1. உயிரெழுத்துகள், உயிர்மெய்யெழுத்துகள் தொடர்பான அனைத்து அகராதிப் பதிவுகளும் 30.11.2026-க்குள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும்.
2. தேவையான தலைச்சொற்களுக்குப் பதிவின் இறுதியில் பொருத்தமான ஒத்தசொற்கள் (Synonyms) சேர்க்கப்பட வேண்டும்.
3. படங்கள் இடம்பெற வேண்டிய தலைச்சொற்களின் தனிப்பட்டியல் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.
4. ஒவ்வொரு பதிவிலும் தேவைக்கேற்பச் சொல்லின் இலக்கண வகை, ஆங்கிலப் பொருள், எளிய விளக்கம், எடுத்துக்காட்டுத் தொடர் மற்றும் பொருத்தமான படங்கள் இடம்பெறுமாறு கவனிக்க வேண்டும்.
5. மாணவர் அகராதிப் பணியை உரிய தரத்துடன், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்து, முழுமையான முன்னேற்ற அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.



## 08.07.2026 – சிந்தனைக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 08.07.2026 அன்று சிந்தனைக் களஞ்சியம் ஆய்வுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பின் வருவோர் கலந்துகொண்டனர்.

1. முனைவர் பா.ரா. சுப்பிரமணியன், 2. முனைவர் ஒப்பிலா மதிவாணன், 3. முனைவர் வாணி அறிவாளன், 4. முனைவர் கமலி, 5. முனைவர் அ. ஜேம்ஸ், 6. முனைவர் சிவ முருகேசன்

## சங்க இலக்கியம் - குறிச்சொல் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 22.07.2026 அன்று சங்க இலக்கியக் குறிச்சொல் களஞ்சியம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

கலந்துகொண்டவர்கள்

1. முனைவர் மணவழகன், 2. முனைவர் நா. சந்திரசேகரன், 3. முனைவர் மு. சேரன், 4. முனைவர் ம. இளங்கோவன். 5. முனைவர் சிவ. முருகேசன்

இக்கூட்டத்தில், முனைவர் மணவழகன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரின் கருத்துகளுக்கு ஏற்பத் தயாரித்திருந்த திட்ட வரைவு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், சங்க இலக்கியக் குறிச்சொல் களஞ்சியம் என்ற பொருண்மையில் மேற்கொள்ளப்படவுள்ள தொகுப்புப் பணிகள், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான காலஅளவு, திட்டச் செலவினங்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் திட்ட உதவியாளர்களின் பணிப் பொறுப்புகள், ஊதிய விவரங்கள் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டன.



## சங்க இலக்கிய இடவரைவியல் (ஊர்ப்பெயர்க்) களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 22.07.2026 அன்று மாலை சங்க இலக்கிய இடவரைவியல் களஞ்சியம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

கலந்துகொண்டவர்கள்

1. முனைவர் நா. சந்திரசேகரன், 2. முனைவர் மு. சேரன் (தொல்லியல் துறை), 3. முனைவர் ம. இளங்கோவன், 4. முனைவர் சிவ. முருகேசன்

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரின் கருத்தின் அடிப்படையில் முனைவர் நா. சந்திரசேகரன் அவர்கள் தயாரித்திருந்த திட்ட வரைவு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கூகுள் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கிய இடவரைவியல் (ஊர்ப்பெயர்க்) களஞ்சியம் உருவாக்குவது தொடர்பாகத் தொகுப்புப் பணிகள், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான காலஅளவு, தொகுப்புப் பணிக்கான செலவினங்கள், ஒருங்கிணைப்பாளர்கள், திட்ட உதவியாளர்கள், அவர்களுக்கான ஊதியம் ஆகியவை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டன.

## மறைமலையடிகள் 150ஆவது பிறந்தநாள் நிறைவு விழா

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் மறைமலையடிகள் 150ஆவது பிறந்தநாள் நிறைவு விழா 15.07.2026 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கட்டடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள அறை எண் 50-இல் நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் சா. சரவணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மற்றும் மறைமலையடிகளாரின் மரபு வழியில் வந்த தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சாரதா நம்பி ஆரூரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர் எஸ். ஆம்ஸ்ட்ராங் முன்னிலை வகித்தார்.



இவ்விழாவில் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் முனைவர் ரீட்டா ஜான், இலங்கை திரிகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு க. ச. குகதாசன், கனடா அனைத்துலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் திரு நிமால் விநாயகமூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் முனைவர் வாணி அறிவாளன் ஆகியோர் மறைமலையடிகளாரின் தனித்தமிழ்க் கொள்கை, தமிழ்ப்பணி மற்றும் அதன் இன்றைய தேவையை வலியுறுத்தி உரையாற்றினர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் முனைவர் வே. நிர்மலர்ச் செல்வி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

# சொல்புதிது 15

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதினைந்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 15.07.2026 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Premium villa plot | உயர்தரச் சீர்மனை |
| 2 | State of art | அதிநவீனம் |
| 3 | Memflation | நினைவீக்கம் |
| 4 | Half bathroom | பகுதிக் குளியலறை |
| 5 | Shower room | தூறலறை |
| 6 | Washroom | கழுவறை |
| 7 | Powder room | ஒப்பனையறை |
| 8 | Lavatory | கழிப்பறை |
| 9 | Sweatshirt | குளிர்தடைச் சட்டை |
| 10 | Bread slicer | ரொட்டி சீவி / வெதுப்பிச்சீவி |
| 11 | Cheese slicer | பாலாடைச்சீவி |
| 12 | Concealer | மறைப்பூச்சு |
| 13 | Window washer | சாளரத் துடைப்பான் |
| 14 | Lip liner | உதட்டு வரைகோல் |
| 15 | Room freshener | அறை மணப்பரப்பி |
| 16 | Container set | கொள்கலன் தொகுப்பு |
| 17 | Kitchen set | சமைகலன் தொகுப்பு |
| 18 | Dinner set | உண்கலன் தொகுப்பு |

| | | |
|---|---|---|
| 19 | Dark chocolate | கரு மென்மிட்டாய் / கார் இன்னட்டு |
| 20 | Home stay | இல்லத் தங்கல் |
| 21 | Sunscreen | கதிர்த் தடைக்காப்பு |
| 22 | Skin cream | தோல் களிம்பு |
| 23 | Skin art | தோல் ஓவியம் |
| 24 | Skin glue | தோல் ஒட்டுப்பசை |
| 25 | Prime slot | முதன்மை ஒதுக்கீடு |
| 26 | Research Fellowship | ஆய்வு உதவித்தொகை |
| 27 | Water vending machine | நீர் வழங்கு இயந்திரம் |
| 28 | Pickup van | குட்டிச் சரக்கு உந்து / அழை உந்து |
| 29 | Box office hit | பெருவெற்றி |
| 30 | Touch ID | தொடுகுறி |
| 31 | Face ID | முகக்குறி |
| 32 | Pattern | காப்புக்குறி |
| 33 | PIN | குறியீட்டு எண் |
| 34 | Container lorry | சரக்கு உந்து |
| 35 | Tanker lorry | நீர்மச் சரக்கு உந்து |
| 36 | Pickup lorry | பெரும் சரக்கு உந்து / அழை சரக்குந்து |
| 37 | Tipper lorry | கொட்டுச் சரக்கு உந்து |
| 38 | Reward points | ஊக்கப் புள்ளிகள் |
| 39 | Loyalty points | மதிப்பியல் புள்ளிகள் |
| 40 | Score points | ஈர்ப்புப் புள்ளிகள் |
| 41 | Negative point | எதிர்மறைப் புள்ளி |
| 42 | Penalty point | தண்டப் புள்ளி |
| 43 | Service apartment | தங்கல் அடுக்ககம் |
| 44 | Unisex PG | பலர்பால் கட்டண விருந்தினர் |
| 45 | Co-living | பகிர்வில்லம் |
| 46 | Backpacker hostel | சிக்கனப் பயணி விடுதி/<br>சுமையிலாப் பயணியர் விடுதி |
| 47 | Body art | உடல் ஓவியம் |
| 48 | Bubblegum | மெல்லு மிட்டாய் |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், பாரதி பாலன், ம. இளங்கோவன், சிவ முருகேசன், விஜயலட்சுமி இராமசாமி, ஊடகவியலாளர்கள் மு. முருகேசன், ராஜ் கண்ணன், திரு. நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பிறமொழிச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டிய சொற்களை எவரும் அனுப்பலாம்.

## வலைத்தள மேம்பாடு

29.07.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தள மேம்பாடு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பேராசிரியர்கள் சா. சரவணன், ஒப்பிலா மதிவாணன், சந்திர சேகரன், ம.இளங்கோவன், சிவ முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் வளர்ச்சிக் கழக வலைத்தளப் பக்கத்தில் ஏற்கனவே தலைவர் அவர்கள் குறித்து அனுப்பிய திருத்தங்கள் குறித்தும் புதிய திருத்தங்கள் இடுவது பற்றியும் எக்ஸ் மீடியா சொல்யூஷன்-இல் இருந்து வந்த மென்பொறியாளரிடம் அறிவுறுத் தப்பட்டது. விரைவில் பணிகளை முடித்து அறிக்கை அனுப்புமாறு கூறப்பட்டது.

